## எஸ்.ஐ.ஆர். படிவம் நிரப்பும் பணியை விரைவுபடுத்திட மகளிர் அணிக் கூட்டத்தில்
## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தல்!




சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட/பகுதி/வட்ட மகளிர் நிர்வாகிகள், மகளிர்–மகளிர் தொண்டர் அணி மற்றும் 21 சார்பு அணிகளிலுள்ள மகளிர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 24.11.25 நேற்று மகளிர்–மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு எஸ்.ஐ.ஆர். படிவத்தை நிரப்பும் பணியை விரைவுபடுத்துவது குறித்து ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் புனிதவதி எத்திராஜன் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, சாவித்திரி வீரராகவன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஆர்.கலைச்செல்வி, எம்.தாவூத் பீ எம்.சி, மற்றும் மகளிர்–மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், 21 சார்பு அணிகளின் மகளிர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### 9வது சீக்கிய குரு
## ஸ்ரீ குரு தேக் பகதூரின் உயரிய தியாகத்தின் 350 வது ஆண்டு விழா!
### பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மானுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக் கடிதம்!

**சென்னை, நவ. 25 -**

**பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதம் வருமாறு :**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 17.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஹர்பஜன் சிங் மற்றும் பஞ்சாப் மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேந்தர் குமார் கோயல் ஆகியோர் சந்தித்து, பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நவம்பர் மாதம் நடைபெற வுள்ள ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பாக, தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோரை அவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில், நேற்று முன்தினம் (23.11.2025) ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதம் மற்றும் நினைவுப் பரிசினை பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.



பஞ்சாப் மாநில அரசின் சார்பில், ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதத்தை, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதத்தில்,**

குரு தேக் பகதூர் ஜியின் 350வது தியாகிகள் தின நினைவேந்தல் விழாவில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அளித்த அழைப்பிற்கு மீண்டும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும்,

இந்த முக்கியமான நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களையும் தனது சார்பாக இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாகவும், அவர்களை அன்புடன் வரவேற்க முன்வந்த தங்கள் நல்லெண்ணத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், உங்களிடம் வழங்குவதற்கு அவர்களிடம் அளித்துள்ள நினைவுப் பரிசினை அன்புடன் ஏற்றுக்கொள்ளு மாறும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

விழா மிகச் சிறப்பாக நடைபெற தனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, குரு தேக் பகதூர் அவர்கள் நிலைநாட்டிய துணிச்சல், கருணை மற்றும் மதச் சுதந்திரம் ஆகிய உன்னத இலட்சியங்களுக்கு தனது மரியாதையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

### பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில்
## குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் - திட்டப்பணி!
### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

*சென்னை, நவ.25-*

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (24.11.2025) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரிலுள்ள பேருந்து நிறுத்தத்தை வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிய குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் அமைப்ப தற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, முல்லை நகர், சென்ட்ரல் அவென்யூ சாலை புதிய சமுதாய நலக்கூடம், எருக்கஞ்சேரியில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம் மற்றும் மகாகவி பாரதியார் நகர், மசூதி தெருவில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்தின் முன்னேற்றப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யூ.கணேசன், நிலைக் குழுத்தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) திருமதி.சர்வஜெயா தாஸ் நரேந்திரன், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு. இந்துமதி, இணை இயக்குநர் (பொது நூலகம்) இளங்கோ சந்திரகுமார் கண்காணிப்பு பொறியாளர்கள் மா.பாலமுருகன், ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் ஜெ.டில்லி பாபு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக
## தொழிற்சங்க அங்கீகார தேர்தல் - தொ.மு.ச.விற்கு ஐ.என்.டி.யு.சி. ஆதரவு!
### ஐ.என்.டி.யு.சி. தலைவர் மு.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*சென்னை, நவ.25-*

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் தமிழ்நாடு ஐ.என்.டி.யு.சி. தலைவர் மு.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் தொழிற்சங்க அங்கீகார தேர்தல் டிசம்பர் 10-ஆம் தேதி நடைப்பெறவிருக்கிறது. அதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

திராவிட முன்னேற்ற கழகத்துடன் காங்கிரஸ் கட்சி கூட்டணியில் தொடர்ந்து இருந்தும் வருகிறது. தேர்தலில் மாபெரும் வெற்றியும் பெற்றுள்ளது. அகில இந்திய அளவில் இந்தியா கூட்டணியில் தி.மு.க.வும் அங்கம் வகிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். தொழிலாளர்களுக்கு பாதுகாவலராகவும் உள்ளார். ஏற்கனவே, தி.மு.க தொழிற்சங்கமான தொழிலாளர் முன்னேற்ற சங்கத்துடன் தமிழ்நாடு ஐ.என்.டி.யு.சி இணக்கமாகவும் நட்பாகவும் மற்றும் தொழிலாளர்களுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுவதை கண்டித்து நடைபெற்ற போராட்டங்களிலும் ஒன்றிணைந்து கை கோர்த்து வந்துள்ளது.

அந்த அடிப்படையில் நடைபெவுள்ள, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிற்சங்க அங்கீகார தேர்தலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திற்கு தமிழ்நாடு ஐ.என்.டி.யு.சி. முழு ஆதரவை தெரிவித்துக் கொள்வதோடு அச்சங்கத்தை அமோகமாக வெற்றி பெற செய்யுமாறு நிர்வாகிகள், உறுப்பினர்களை தமிழ்நாடு, ஐ.என்.டி.யு.சி. கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மு.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


